திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அங்கே தங்கும் விடுதி பற்றிய தகவலைச் சொல்லி, இண்டர்நேஷனல் டூரிஸ்ட் செண்டர் ஆக்குவதற்கு மேற்கொண்டு திட்டங்கள் எதுவும் இல்லை என்ற தகவலைத் தந்தார்கள். நீண்ட நாட்களுக்கு முன்னாலே காந்தியடிகள் அஸ்தி வைத்த இடத்தில், ஒரு மணி மண்டபம் கட்டி வைத்திருப்பதைப் போல், காமராஜ் அவர்கள் அஸ்தி வைத்ததன் நினைவாக அங்கே ஒரு பூங்காவும், நினைவு மண்டபமும் எழுப்புவதாகத் திட்டமிருந்தது. அந்தத் திட்டம் அரசின் பரிசிலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின் இரண்டாவது பகுதிக்குத்தான், அத்தகைய திட்டம் எதுவும் தற்சமயம் பரிசிலனையில் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது பகுதி சுமார் இரண்டு மைல் நீளம் உள்ள பறக்கைக் குளத்தில் படகுவிட ஏற்பாடு செய்யப்படுமா என்றால், அதைச் செய்ய இயலாது ; அதற்கு ஏற்ற ஏரியும் அல்ல. ஆனால், இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர் ஆக்கப்பட்ட கன்னியாகுமரியில் என்ற கேள்வியில், அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக, இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குவதற்கு நிபுணர் டாக்டர் டி. கிருஷ்ணசாமி அவர்களை ஒரு மாஸ்டர் பிளான் கேட்டிருக்கிறோம். அவர்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை மத்திய அரசிற்கு அனுப்பும்படி சொல்லியிருக்கிறார்கள். இதை ஒரு சுற்றுலா நகரமாக ஆக்க வேண்டுமென்று மைய அரசோடு நாங்கள் வாதாடிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனைகள் எல்லாம், அந்த மாஸ்டர் பிளான் வந்ததற்குப் பிறகு பரிசீலிக்கப் படும்.

Moore Market

* *Q.*—No. 877.—Thiru S. RAJARAMAN : Will the Hon the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether the Government have received any representation in September 1980 from the Moore Market Merchants Association in Madras against the demolition of the Moore market Buildings ?

(*b*) if so, the action taken thereon?

1981 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மூர் மார்க்கட் கட்டிடம் உள்பட 42.03 ஏக்கர் நிலம் தென் பிராந்திய ரயில்வேக்கு மாற்றம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த நிலத்தைக் காலி செய்து இரயில்வேக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த வியாபாரி களுக்கு மாற்று இடம் அளிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* வினா எண். 878—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது 'மூர் மார்க்கட்' உள்ள இடத்தை இரயில்வே இலாகாவிற்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அங்கு வணிகம் செய்பவர்களுக்கு வேறு இடம் ஏதும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அங்கு வணிகம் செய்பவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடியை இடிப்பதற்கு முன்பு இந்தக் கட்டிடத்தை இடிக்கக் கூடாது என்று ஏதாவது ஒரு ஷரத்து அதிலே இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடியை இடிக்கக் கூடாது என்று ஷரத்து இருப்பதாகத் தெரியவில்லை. அதுபற்றிய குறிப்புகளும் இல்லை. அந்த மூர் அங்காடியைக் காலி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது என்பதை மட்டும்தான் இந்த நேரத்தில் சொன்னேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூர் அங்காடியிலே இருக்கின்ற வணிகர்கள் நீண்ட நெடும் நாட்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அங்கு எத்தனை கடைகள் இருக்கின்றன. மாற்று இடங்கள் கொடுப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த இடத்தை அரசு தேர்வு செய்திருக்கிறது? அதனை அந்த வணிகர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?